## பொங்கலூர் - பல்லடம் ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

கோவை, ஆக. 12 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் சமூக பாதுகாப்புத்திட்ட தனித் துணை ஆட்சியர் குமாரராஜா தலைமையில் 26.07.2024 வெள்ளிக்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, வெள்ள நத்தத்தில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடம், பல்லடம் ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, அக்கணம்பாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடம், கணபதிபாளையம் ஊராட்சி, கணபதிபாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ,1.46 கோடி மதிப்பீட்டில் கணபதிபாளையம் முதல் அல்லாளபுரம் வரையிலும் பாரியூர் அம்மன் நகர் முதல் நொச்சிபாளையம் வரையிலும் தார்சாலை அமைக்கும் பணி, மல்லேகவுண்டன்பாளையம் ஊராட்சி, மல்லேகவுண்டன் பாளையத்தில் ஊத்துக்குளி ஆதிதிராவிடர் காலனிக்கு முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டதின் கீழ் ரூ.56.62 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ2.80 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ச.ராஜசேகர், மாவட்ட துணை செயலாளர் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் பி.கே.கனகராஜு, மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பரமணியம், பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பொங்கலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.பாலுச்சாமி, பல்லடம் ஒன்றியக்குழு துணைத்தலைவர் ஈ.பாலசுப்பிரமணியம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் இச்சிப்பட்டி சிவக்குமார், லதா வெங்கடாசலபதி, ஒன்றிய கவுன்சிலர் லோகுபிரசாத், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிவா, கௌரி சங்கர், தகவல் தொழில்நுட்ப அணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணபிரவீன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சிவாச்சலம், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட முன்னாள் பொருளாளர் க.ரத்தினசாமி, மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் பி.சி.கோபால், மாவட்ட கலை இலக்கிய அணி முன்னாள் துணை அமைப்பாளர் வே. இன்இளங்கோ, ஊராட்சி மன்ற தலைவர்கள் தம்பி முத்துக்குமாரசாமி, பகவதி கிருஷ்ணன், ஆத்ம சங்க தலைவர் சிவகுமார், கிளை செயலாளர் சிவக்குமார், சேதுமாதவன் உள்பட

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கனகராஜ், பால சுப்பரமணியம் (பல்லடம்), விஜயகுமார் (பொங்கலூர்), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் கிழக்குப் பகுதியில்

# ‘இல்லம் தேடி இளைஞர் அணி’ முகாம்!

சென்னை, ஆக.12-

தாம்பரம் கிழக்கு பகுதி கழக சார்பில் ‘இல்லம் தேடி இளைஞர் அணி’ சேர்த்தல் அவசர செயற்குழு கூட்டம் கேம்ப் சாலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தை பகுதி கழக செயலாளர் மாடம்பாக்கம் நடராஜன் மற்றும் மாவட்டக் கழகத்தில் அனுபவிக்கப்பட்ட பொறுப்பாளர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், தாம்பரம் மாநகர துணை செயலாளர் பொன்.சதாசிவம், தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி, 66-வது வட்டக் கழக செயலாளர் சாந்தகுமார் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் உடனிருந்தனர்.

அதனை தொடர்ந்து கேம்ப் ரோடு பகுதியில் வீடு வீடாக சென்று இளைஞரணி சேர்த்தல் முகாமினையும் தொடங்கி வைத்தனர்.






நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

ரூ.800.75 கோடி மதிப்பீட்டிலான
முடிவுற்ற திட்டப் பணிகள் தொடக்க விழா
ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான
புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும்
திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி
ஆகிய புதிய மாநகராட்சிகள் தொடக்க விழா








நாள்: 12.08.2024 திங்கட்கிழமை நேரம்: காலை 11:00 மணி
இடம்: தலைமைச் செயலகம், சென்னை.

காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கிவைத்து,
144 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் மற்றும்
27 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கி,
புதிய வாகனங்களை கொடியசைத்துத் தொடங்கி வைப்பவர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

முன்னிலை :
மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. கே.என். நேரு அவர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை குடிநீர் வாரியம், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும்
நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில்

- புவியிடஞ் சார்ந்த தகவல் அமைப்பு மேலாண்மை மையம்
- புதிய பூங்காக்கள்
- புதிய விளையாட்டு மைதானங்கள்
- புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்
- புதிய வணிக வளாகங்கள்
- புதிய பேருந்து நிலையங்கள்
- புதிய அங்கன்வாடி மையங்கள்
- கூடுதல் பள்ளிக் கட்டடங்கள்
- சாலைப் பணிகள்
- புதிய வகுப்பறைகள்
- புதிய நீர்தேக்கத் தொட்டி
- சுரங்கப்பாதை
- புதிய பாலங்கள்
- ஆகாய நடைபாதை
- பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை
- ஏரி மற்றும் கால்வாய் சீரமைப்பு
- தூய்மைப் பணியாளர்கள் குடியிருப்பு
- ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள்
- புதிய அலுவலகக் கட்டடங்கள்
- கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்
- அறிவுசார் மையங்கள்
- பொது கழிப்பிடங்கள்
- புதிய குடிநீர்த் திட்டப்பணிகள்
- பாதாளச்சாக்கடைத் திட்டப்பணிகள்
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்
- யானைக்கவுணி இரயில்வே மேம்பாலம்
- நவீன மீன் அங்காடி
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்து மேம்படுத்துதல்

உள்ளிட்ட 104 முடிவுற்ற புதிய திட்டப் பணிகள் தொடக்க விழா,
30 புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் 68 புதிய வாகனங்கள் வழங்குதல்

முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை








செ.ம.தொ.இ/834/வரைகலை/2024


# தி.மு.கழக இளைஞர் அணி 5வது மண்டலக் கூட்டம்!

### மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிவிப்பு!

ஈரோடு, ஆக.12-

கழக இளைஞர் அணி 5வது மண்டலப் பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

மண்டலம் 5க்கு உட்பட்ட (கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, கரூர், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகரம், நீலகிரி) மாவட்ட மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று (12.08.2024 - திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் ஈரோடு கரூர் பைபாஸ் ரோடு சோலார் அருகில் மாணிக்கவாசகர் காலனியில் அமைந்துள்ள ஈரோடு நாடாளுமன்ற தொகுதி அலுவலகத்தில் 5வது மண்டலத்தில் உள்ள மாவட்ட மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம், இளைஞர் அணி தலைமையிலும், மாவட்ட அமைப்பாளர்கள் அக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : 1. கலைஞர் நூற்றாண்டு படிப்பகம்

2. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி

துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி ஏற்பாட்டின் விபரங்கள் கொண்டு வரவும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும் மற்றும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், சிவபுரம், ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி . மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டு, மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். இதேபோன்று, ஆலங்குடி, கீழாத்தூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு, மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# நந்தனம் அரசு ஆடவர் கல்லூரி மாணவர்களுக்கு பற்று அட்டைகள் வழங்கல்!

சென்னை, ஆக 12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கும் நிகழ்வினை காணொளி வாயிலாக சென்னை நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் காட்சிப்படுத்தும் நிகழ்ச்சிக்கு அந்த கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவன் என்கிற வகையில் சிறப்பு விருந்தினராக கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ., முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் நந்தனம் அரசு ஆடவர் கலைக்கல்லூரி மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்.

இந்த இனிய நிகழ்வுக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜோதி வெங்கடேஸ்வரன் அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் புதல்வன் திட்டத்தின் பொறுப்பு அலுவலர் முனைவர் ஜெயராணி வரவேற்புரை ஆற்றினார். முனைவர் அபிராமி அவர்கள் அறிமுகஉரையாற்றினார். முனைவர் பரமகுரு ராஜ் நன்றியுரையாற்றினார்.

முனைவர் செல்லதுரை நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.



தமிழ் வழிப் பயின்றவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி இயக்குனர் பணிகளுக்கு தமிழ் எம்.ஏ., பயின்ற 50 சதவீதம் பேருக்கு முன்னுரிமை வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார் பொள்ளாச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தகவல் பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்டம் செயல்படுத்த காரணமாக இருந்த முன்னாள் முதல்வர் காமராஜர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே.பழனிச்சாமி. என்.மகாலிங்கம் உள்ளிட்டவர்கள் நினைவாக பொள்ளாச்சி உடுமலை சாலையில் உள்ள கண்காணிப்பு பொறியாளர் அலுவலக வளாகத்தில் ரூபாய் 4.28 லட்சம் மதிப்பில் நினைவு மணிமண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது, இந்த பணிகளை செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார், நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், நகர மன்ற தலைவர் சியாமளா நகரச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், வடக்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் மருதவேல் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.